ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8 ]

Total No. of Printed Pages : 8 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 59 ]

Total No. of Questions : 59 ]

# D

## CCE PR

**REVISED & UNREVISED**

Question Paper Serial No. **81**

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

## ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

## Subject : First Language — TAMIL

**( ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Repeater )**

ದಿನಾಂಕ : 22. 09. 2020 ] [ Date : 22. 09. 2020

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–1-45 ರವರೆಗೆ ] [ Time : 10-30 A.M. to 1-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 59-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

TEAR HERE TO OPEN THE QUESTION PAPER
இங்கு ஓட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

Tear here

I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக : 10 × 1 = 10

1. தொல்காப்பியம் கூறும் ‘பிசி’ என்பது

(A) விடுகதை (B) பழமொழி

(C) தொடர்கதை (D) பழமை மொழி

2. பண்பு த்தொகைக்கு எடுத்துக்காட்டு

(A) இசை தமிழ் (B) செந்தமிழ்

(C) நாடக தமிழ் (D) இயல் தமிழ்

3. உரிச் சொல்

(A) உறுமீன் (B) உவகை

(C) அறுசுவை (D) பகைமை

4. ஐந்து சீர்களைக் கொண்டது

(A) குறளடி (B) அளவடி

(C) சிந்தடி (D) நெடிவடி

5. சொற்கள் பல அடுக்கி வருவது

(A) அடுக்குத் தொடர் (B) அன்மொழித் தொடர்

(C) பிறமொழி தொடர் (D) வேற்றுமைத் தொடர்

6. குற்றமற்ற வெற்றியைக் கொண்டாடுவது

(A) தும்பை (B) வஞ்சி

(C) வாகை (D) உழிஞை

7. ஏரோட்டுவதை விடச் சிறந்தது இது

(A) விதைத்தல் (B) எருவிடுதல்

(C) களை எடுத்தல் (D) கதிர் அறுத்தல்

8. ‘வேய்’ என்பதன் பொருள்

(A) மூங்கில் (B) பாக்கு

(C) வேம்பு (D) ஆல்

9. 'நறுங்கனி' பிரிக்கும் முறை

(A) நறு + கனி (B) நறுமை + கனி

(C) நறு + உங்கனி (D) ந + கனி

10. கற்றாவின் மனம் போலக் கசிந்து உருகியவர்

(A) ஆர்க்கிமெடிஸ் (B) மாணிக்கவாசகர்

(C) டாக்டர் மு.வ. (D) குமர குருபரர்

II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 5 × 1 = 5

11. மலையும் மலை சார்ந்த இடமும் : குறிஞ்சி

காடும் காடு சார்ந்த இடமும் : .......................................... .

12. காக்கையை இரவில் வெல்வது : கூகை

கூகையைப் பக ல் வெல்வது : .......................................... .

13. வெப் சைட் : வலைதளம்

இ மெயில் : .......................................... .

14. கம்பராமாயணத்தை இயற்றியவர் : கம்பர்

பம்ப பாரதத்தை இயற்றியவர் : .......................................... .

15. கன்று வருடி மடி சுரக்கும் : பசு

ஒட்ட நறுக்கினும் மொக்கை வாலாட்டும் : .......................................... .

III. ஒரு தொடரில் விடை தருக : 8 × 1 = 8

16. மோனை என்றால் என்ன ?

17. அந்தமான் படகுப் பயணத்தில் முத ல் தென்படுவன யாவை ?

18. கடுகு உள்ளம் கொண்டோர் என்று பாரதிதாசன் யாரைக் குறிப்பிடுகிறார் ?

19. ஏன் மதுரைச் சொக்கநாதன் மண்ணைச் சுமந்தான் ?

20. திருமகள் எங்கு குடிபுகுந்து மகிழ்ந்திருக்கிறாள் ?

21. விடுதலைப் பெண்கள் எவ்வாறு கும்மியடித்தனர் ?

22. தந்தை செய்யவேண்டிய கடமையாகப் பொன்முடியார் கூறுவது யாது ?

23. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 15 × 2 = 30

24. இராவணனுக்கு பிரமன் கொடுத்த சாபம் யாது ?

25. சிவனடியாரின் பசிதீர்க்கும் வழி யாது எனக் கேட்ட இளையான்குடி மாறர்க்கு மனைவி கூறிய வழி யாது ?

26. மாதங்கம், பகடு, கம்பமா என்ற பாணனின் சொற்களுக்கு பாடினி உணர்ந்து கொண்ட பொருள்கள் முறையே யாவை ?

27. 'வானம் பாடி' என்று திரு. வி. க.வை எவ்வாறு கூறலாம் ?

28. இலங்காவி தீவில் 'ஆர்ச்சர் மீன்கள்' எவ்வாறு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது ?

29. ஆதிகவி பம்பன் வனவாசி மீது கொண்ட அளவிலா அன்பை நாம் எவ்வாறு அறியலாம் ?

30. ஆகுபெயர் என்றால் என்ன ? இரண்டினைச் சான்றுடன் விளக்குக.

31. அடி என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

32. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?

33. இரட்டைக் கிளவி என்றால் என்ன ? சான்று தருக.

34. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

35. சிந்தைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை எழுதுக.

36. செய்யுளின் உறுப்புகள் யாவை ?

37. புகழையும் இன்பத்தையும் தரவல்லது எது என்கிறார் வள்ளுவர் ?

38. நிலக்கரி தரும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.

V. ஐந்து அல்லது ஆறு தொடரில் விடை தருக : 6 × 3 = 18

39. பாரதிதாசன் தமிழ் மொழியின் சிறப்பினை எவ்வாறு பாராட்டுகிறார் ?

40. அனுமன் கையி ருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது ?

41. அறிவை நோக்கமாகக் கொண்ட யந்திர மனிதர்களால் உண்டாகும் தீமைகள் யாவை ?

42. இன்றைய கிராமத்து இளைஞர்கள் பற்றி கி. ராஜநாராயணன் கூறுவன யாவை ?

43. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

44. அறவழியில் நடக்கும் மாந்தர்களின் பண்புகள் யாவை ?

VI. குறிப்பு வரைக : 2 × 3 = 6

45. வீரமாமுனிவர்

46. புறநானூறு

VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக. 1 × 3 = 3

47. வேற்றுமை அணி

VIII. இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக : 4 × 3 = 12

48. 'பட்டினி கிட
பலாவையே உண்பதென்று'

49. "மரம் வளர்த்தால் நரகம் இல்லை"

50. "ஆயிரங்காணி மானியம் விட்டேன்"

51. இலட்சியமில்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகிற சட்டை மாதிரி உள்ளீடற்றுத் தள்ளாடுகிறது !

IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக. 1 × 3 = 3

52. "ஞாயிற்றைக் கை மறைப்பார் இல்"

*அல்லது*

"எறும்பு ஊர கல்லும் தேயும்"

X. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

53. “சோதியாய்த் தோன்றும்” - என வரும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

“ஈன்று புறந்தருதல்” - என வரும் புறநானூற்றுப் பாடல்.

XI. எட்டு அல்லது பத்து தொடரில் விடை தருக : 2 × 4 = 8

54. சேதுப்பிள்ளையவர்கள் ‘பெருந்தகையர்’ என்ற சொல்லை இரு பொருள்பட உரையாடிய விதத்தை விளக்குக.

55. இயற்கையின் சமநிலை எவ்வாறு கெடுக்கிறோம் என்று தென்கச்சி சுவாமிநாதன் எதனைக் குறிப்பிடுகிறார் ?

*அல்லது*

இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக.

XII. கீழ் வரும் செய்யுளின் பொருளை விளக்கி எழுதுக : 1 × 4 = 4

56. பள்ளம் மேடுள்ள பாதையிலே
பாத்து நடக்கணும் காளைகளே!
பழைய போக்கிலே பயனில்லை - நல்ல
விஷய மிருக்கணும் மூளையிலே - (பள்ள)

*அல்லது*

அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்
மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு

XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : 2 × 2 = 4

இன்று நமக்கு போதிய மழை இல்லை. பெய்யும் மழையும் வெள்ளப் பெருக்காகி நிலத்தை அரித்துக் கொண்டோடி வீணாய்க் கட ல் கலக்கின்றது. வெள்ளம் வடிந்தபின் கடும் வறட்சி தலை தூக்குகின்றது. பல ஊர்களிலும் நகரங்களிலும் மக்கள் தண்ணீர் கிடைக்காமல்

தவிக்கின்றனர். நிலங்களில் பயிர் விளைச்சல் இல்லை. போதிய உணவுப் பொருட்கள் இல்லை. எல்லாவற்றுக்கும் காரணம் காடுகளின் சீரழிவுதான்.

நம் பேராசையால் காடுகளைக் கண்டபடி அழித்துவிட்டோம் மரப்பொருள்கள் செய்யும் பெரும் முதலாளிகளின் வாணிக ஊதியத்துக்காகவும் தோட்டப்பயிர் விளைக்கவும் காடுகள் பெரும் பகுதி மொட்டையடிக்கப்பட்டு விட்டன. எனவே எஞ்சி இருக்கும் காடுகளை இனியேனும் அழியாமல் காப்பாற்றுவதும், புதிய காடுகளை உருவாக்குவதும் நம்மைச் சுற்றி எங்கும் பசுமை மரங்களை வளர்ப்பதும் நம் வாழ்வின் அடிப்படையைக் காத்துக் கொள்ளும் முயற்சியே ஆகும்.

வினாக்கள் :

57. a) காடுகளின் சீரழிவால் ஏற்பட்டுள்ள தீமைகளை எழுதுக :

b) நம் வாழ்வின் அடிப்படையைக் காத்துக்கொள்ளும் முயற்சிகள் யாவை ?

XIV. மடல் எழுதுக : $1 \times 5 = 5$

58. உம் பள்ளியில் நடைபெறும் மரம் நடுவிழாவில் கலந்துகொள்ள வருமாறு சென்னையில் உள்ள உன் நண்பன் / தோழிக்கு மடல் ஒன்று எழுதுக.

அல்லது

நீ வாழும் பகுதியில் பெருமழையால் பாதிக்கப்பட்ட சாலையைச் சரி செய்யக் கோரி மாநகர ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக : $1 \times 5 = 5$

59. அன்றாட வாழ்வில் கணிப்பொறி.

அல்லது

மண் வளம் காக்கும்
இயற்கை விவசாயம்.